நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள், சென்னை-107
முன்னிலை:திரு. பா.கணேசன், இ.ஆ.ப,

ந.க.எண்.21496/2023/ஜே3 (3) நாள்.04.10.2023

பொருள்: பணியாளர் அமைப்பு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை-107 - நேரடி நியமனம் - 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி - IV தேர்வில் தேர்ச்சி பெற்று தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கான தெரிவாளர்கள் பெயர் பட்டியல் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்டது - பணி நியமன ஆணை - வழங்கப்படுகிறது.

படிக்க:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1985/PSD-B2/2023, நாள்.18.08.2023.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் நடவடிக்கைகள் ந.க.எண்.21496/2023/ஜே3, நாள்.07.09.2023.

--------

ஆணை:

மேலே 01-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், நேரடி நியமனம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி - IV தேர்வில் தேர்ச்சி பெற்று தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கான தெரிவாளர்கள் பெயர் பட்டியல் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்டது.

2) நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்ட செல்வி. ஜோ. யுவஸ்ரீ, இத்துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டு கீழ்க்காணும் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி முறைமைகள்) சட்டம் 2016 பிரிவு 17(1)-ன் படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி | பணியமர்த்தப்படும் அலுவலகம் |
|---|---|
| செல்வி. ஜோ. யுவஸ்ரீ<br>5/77-4, புதுக்காடு- 2,<br>குருசாமிபாளையம்,<br>ராசிபுரம்,<br>நாமக்கல் மாவட்டம் -637 403. | உதவி இயக்குநர்,<br>ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,<br>சம்பத் நகர், ஈரோடு Extension-II, உழவர் சந்தை பின்பக்க கேட்,<br>ஈரோடு -638 011. |

3) தனியர் திருத்திய ஊதிய விகிதத்தின்படி Level-08 (19500-71900) என்ற ஊதிய விகிதத்தில் இத்துறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் ஊதியம் பெற்றிட அனுமதிக்கப்படுகிறது.

4) தெரிவாளரிடமிருந்து தமிழ்வழி கல்வி பயின்றதற்கான சான்று பெறப்பட்டு இயக்குநர் பள்ளிக்கல்வி இயக்ககம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு தமிழ்வழிக் கல்வி பயின்றதற்கான சான்றின் உண்மைத் தன்மை அறிக்கை பெறப்படும். அச்சான்று உண்மைத் தன்மையற்றது (not genuine) என அறியவரின் இப்பணியாளர் மீது சட்ட ரீதியான தண்டனை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இப்பணியாளருக்கு வழங்கப்பட்ட ஊதியங்கள் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) இளநிலை உதவியாளர் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி - IV தேர்வு தொடர்பாக வழக்கு ஏதேனும் சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)-யில் நிலுவையில் இருப்பின் இப்பணி நியமன ஆணை அவ்வழக்கின் இறுதித் தீர்ப்புக்குட்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

6) தனியர் தனது வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலகத்தில் பணியில் சேர்ந்தவுடன் உடனடியாக சமர்ப்பிக்குமாறும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இவரது பதிவு வேலைவாய்ப்பு துறையின் உயிர்பதிவேட்டிலிருந்து (Live Register) நீக்கம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7) தனியர் தனக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் சிவில் சர்ஜன் பதவிக்கு குறைவில்லாத அரசு மருத்துவரிடம் உடற்தகுதிச்சான்று உரிய படிவத்தில் பெற்று சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

8) தனியர் தனது சொத்து விவரப்பட்டியலினை உரிய படிவத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலகத்தில் பணியில் சேர்ந்த மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

9) தனியர் தனக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பணியில் சேருமாறு தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் பணியில் சேரத் தவறும் நிலையில், பணியில் சேர்வதற்கு விருப்பமில்லை எனக் கருதி தங்களின் பெயர் தெரிவாளர்கள் பட்டியலிலிருந்து நீக்கம் செய்திட தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016 பிரிவு 7(5)-ன் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், எக்காரணம் கொண்டும் காலநீட்டிப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

10) இளநிலை உதவியாளர் பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்றும், தனியர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தின் விவரங்கள் மற்றும் சான்றுகள் ஏதேனும் தவறு என பின்னர் அறியவரின் நியமன ஆணை முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு இயக்குநர்

4/10/23

பெறுநர்:
செல்வி. ஜோ. யுவஸ்ரீ
5/77-4, புதுக்காடு- 2,
குருசாமிபாளையம்,
ராசிபுரம்,
நாமக்கல் மாவட்டம் -637 403.

நகல்:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
2. உதவி இயக்குநர், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
3. கருவூலம் / சார்நிலை கருவூல அலுவலர், ஈரோடு மாவட்டம்.
4. துணை இயக்குநர் (நி)
5. உதவி இயக்குநர் (நி)
6. கண்காணிப்பாளர்கள் - ஏ, பி, ஜே மற்றும் கே
7. உதவியளர்கள் ஜே1 மற்றும் பி1,
8. இருப்பு கோப்பு
9. உதிரி.